<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

MCOP.No.76/2017 Date: 08.11.2024.

PW1-சபாபதி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

விபத்து நடந்த இடம் திருச்செங்கோடு நோக்கி செல்லும் போது பள்ளமாக இருக்கும் என்றால் சரியல்ல. சமமாக தான் இருக்கும். இது சம்பந்தமாக சங்ககிரி போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த மாதிரி வரைபடத்தின் நகலை பெற்று தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். விபத்தானது திருச்செங்கோடு செல்லும் தார்ரோட்டின் மையப்பகுதியில் நடந்தது என்றால் சரியல்ல. என்னுடைய காயச்சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. அதனை நான் மருத்துவர் மூலம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கு தலையிலும் வலது கையிலும் காயமானது. நான் மாத சம்பளத்திற்கு எலெக்ட்ரிசியன் வேலை செய்கிறேன். இந்த வேலையை கடந்த 3 வருடங்களாக செய்கிறேன். என்னால் எழுத முடியும். ஆனால் மெதுவாக தான் எழுத முடியும். நான் சம்பள சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ரிலையன்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி மாதம் ரூ.12 ஆயிரம் சம்பளம் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு முகத்தின் உருவம் மாறவில்லை என்றால் சரிதான். என்னால் தொடர்ந்து 15 நிமிடம் தான் நிற்க முடியும். என்னால் நிற்கவோ நடக்கவோ முடியாது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு மூக்கில் காயமில்லை. எனக்கு வாயின் உள்பகுதியில் காயமில்லை. எனக்கு விபத்தினால் ருசியை உணர முடியாத நிலை ஏற்பட்டது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்தினால் கண்பார்வை குறைபாடு இல்லை ஆனால் வலது கண்ணில் கண்ணீர் வரும். எனக்கு உள் உறுப்புகளில் காயம் எதுவும் இல்லை. என்னால் சுவாசிக்க இயலாது என சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்த ஊனம், வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவ பில்லில்

ரூ.41,970/- மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

Sd/-சபாபதி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.